ஓம்

சுத்தச்

பாப்பிரஹ்மமேனமஃ.

அன்னதான விளக்கம்.

இது

திருத்துருத்தி - இந்திரபீடம்

ஸ்ரீ காபாத்திரஸ்வாமிக ளாதீனம்

ஈசூர் - ஸ்ரீ சச்சிதாநந்த ஸ்வாமிகள் திருவடித்தொண்டர்

39-வது பட்டாளம் சுபேதார் மேஜராயிருந்த

ஆத்மஞானி

ஸ்ரீ அய்யாக்கண்ணு தேசிகழர்த்திகள்

மாணவருளொருவராகிய

கே. அ. சாமி குப்புசாமி அவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை, ஹிந்தியவாதிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்

வேதாந்த தர்க்க போதகாசிரியருமாகிய

மகாவித்வான்

ஸ்ரீமத் - கோ. வடிவேலு செட்டியாரவர்களால்

பரிசீலையிடப்பட்டு,

அனுபவாகாரம்

தி. வேங்கடராயலு காயுடு அவர்களால்

சென்னை,

வேதாந்த சச்சிதாநந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

[விலை ரூபாய்] 1918.

Registered Copy Right.

முகவுரை.

ஸ்ரீ சங்கரபகவத் பாதாசாரிய சுவாமிகள் துதி.

நேரிசை வெண்பா.

வேதாந்தத் துண்மையது வேறல்ல தானென்று
நாதாந்த நற்சிவனே நானிலத்தில்—போதகன்போல்
சங்கரா சாரியனுய்த் தான்றோன்றித் தாளளித்தான்
அங்கவன்ற ளென்னுளென்று மாம்.

தேவப்பிறப்பினும் சிறந்த மக்கட்பிறப்பெய்தப்பெற்ற நாம் சிக்கையுமொழியுஞ் செல்லா நிலைமையதாகிய அந்தமிலின்பத் தழிவில் வீட்டை யடைவதற்கான கல்வி, தவம், தான முதலிய சாதனம் பலவற்றுள் தானமே சிறந்ததாம். அத்தானத்தை 32 ஆகப் பெரியோர் வகுத்துள்ளாரேனும்,

"மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ணல் லாரடி யார்தமை யழுதுசெய் வித்தல்
கண்ணி னுலவர் நல்விழாப் பொலிவுகண் டார்த்தல்
உண்மை யாமெனி னுலகர்முன் வருகென வுரைப்பார்."

"விஞ்சையுந் தவமுங் கருதினேர் தம்மின்
மேண்மையாந் தானமவ் வாறே
யுஞ்சிடப் புகல்வ னன்னதா னத்தா
லுய்ந்தவர் பயிற்றலா லறிமன்
விஞ்சு தானத்தி லரும்பய னன்ன
மிருவருந் விரும்புவ தறவாந்
தஞ்சமாந் தான மளிப்பவன் முதன்மை
தாங்கினே னுமெனப் புகன்றனன்."

"சொன்ன நல்லறந் தனக்கெலாந் தூயநல் லறமா
மன்ன மீகுதல்."

"அன்ன தான மறைந்த வற்று ளதிக மேலாம்" என்னும் வகுக்களால் அன்னதானமொன்றே சிறந்ததென சிலரும்

திருக்கின்றனர். கல்வி, செல்வ முதலியவற்றை உல கெலாம்புகழ வொருங்கமையப் பெற்றவர் * 1. அன்னதானமென்ப தியாது? 2. அதனை யார்க்குச் செய்வது? 3. எவ்வாறு செய்வது? 4. ஏன் செய்வது? 5. எக்காலத்திற் செய்வது? 6. யார் செய்வது?

---

* 1. பசித்து வந்தார்க்குத் தன்னிடத்துள்ள ஆகாரத்தைப் பசிதீர இடுவது.

2. சாதுக்களுக்கும், "அற்ற ராழிபசி தீர்த்த லஃதொருவன், பெற்ற பொருள்வைப் புழி" என்றபடி ஏழைகட்கும், (கண்ணற்ற) குருடர்கட்கும், (கைகாலற்ற) மொண்டிகட்கும், ஆதாவற்ற குழந்தைகட்கும், திக்கற்ற விருத்தர்கட்கும், சக்தியற்ற பலவீனர்கட்கும், திசைதப்பிவந்த செல்வர் கட்குமாம். செய்யாக் குற்றஞ்செய்து சிறைப்பட்ட கொடியோர்கட்கும் அன்னமிடல் வழக்காமெனின், அஃது இன்னாவினியனெனக் குறியாது யார்க்குஞ் செய்தலாம்.

3. புகழையும், எதிர்பலத்தையும் விரும்பாது, பொருமை போராசை கோபம் கொடுஞ்சொலின்றி, அகமலர்ச்சியேயன்றி முகமலர்ச்சியோடும் இன்சொற்கூறிச் செய்வதாம்.

4. கிரேதாயுகத்தில் சத்தத்தையும், திரேதாயுகத்தில் மாம்சத்தையும், துவாபாயுகத்தில் எலும்பையும் பற்றிநின்ற உயிரானது இக்கலியுகத்தில் அன்னத்தைப்பற்றி யிருப்பதாலும், " அன்னமயம் பிராணமயம் " என்ற வாக்கியமே அதனைவலியுறுத்துவதாலும், என்றேயிது மிகுந்த பசிநோய்க்கு அன்னத்தைவிட அமிழ்தம் கிடையா தானதாலும், கற்பத்திலிருக்கும் சிசு முதல் வீயுந் தருணத்தை எதிர்பார்க்கும் விருத்தர் வரையில் வேண்டி நிற் பது அன்ன மாதலாலும், உண்டவர்களை ஜீவகளோமாறிச் சிவகளை யுண்டா கத் கண்டபோது இட்டார்க்கோ ரடக்கக் கூடாத ஆனந்தக்களை யுண்டாவ தாலும், அவசியம் அன்னதானம் செய்தல் வேண்டும்.

5. எத்தனையோ அடியார்களையும், தாசர்களையும், உய்விக்கவேண்டி ஹர பிரமேந்திராதி தேவர்கள் மானிடவுருத்தாங்கி அகாலத்தில் வந்து பிக்ஷைகேட்டு இரட்சித்தாராதலாலும், அவர்களைப்போலத் தானமீவானைக் கடவுளர்கள் ஆட்கொள்ளும் கிருபையைவதது எக்காலத்தில் எவ்வுருத்தாங்கி வருவாரோ வாதலாலும், காலவரையறையின்றிப் பசித்தோர்வருங் காலங்களி லெல்லாம் அவர்க்கு அன்னதானஞ்செய்தல் வேண்டும்.

6. "சையொத்திருந்தா லேயமிட்டுண்" "ஐயம்புகினும் செய்வனசெய்" " இரந்தும் பரிந்திடு " என்னும் ஆன்றோர் வாக்கியப் பிரமாணப்படி உன்னாரோ யன்றி யில்லாரும், யார்க்கும் பசி பொதுவானதால் ஆஸ்திகர்க ளுக்கேயன்றி நாஸ்திகர்களுக்கும் அன்னதானம் செய்தல் வேண்டும்.

7. செய்தாரணையும் பயன் யாது? 8. செய்து பயன்பெற்றார் யாவர்? 9. செய்யார் அடையும் தீது யாது ? என்பனவற்றை யெவ்வளவும் எக்காலத்திலு மெண்ணுதே தேகமே ஆத்மா, போகமே முத்தி, கண்டதேகாட்சி, உண்டதே யுணவு, கொண்டதே கோலமெனப் பண்டையு வேதாகம புராணேதிகாசங்கட்கு விரோதமாய் உண்மை ஞானமுடையவர்களருவருக்கத் தமது மனசாட்சிக்கு மாறுகக் காலங்கழித்து வருகின்றனர்.

முற்பிறப்பிற் செய்த நல்வினையால் செல்வத்தை இப்பிறப்பிற்பெற்று இறும்பூதோடு வாழ்பவர்களும், ஊழியம் செய்து கஷ்ட ஜீவனஞ்செய்பவர்களும், தத்தம் குடும்பத்திற் கான செலவுகளைச் செய்துகொண்டு காலந்தள்ளுகின்றனரா வென்று பார்த்தால், அவ்வாறு செய்துவருபவர் கிடைப்பது துர்லபமென்றே சொல்லலாம். எப்படியெனின்,

சிலர் சுவல்ப கஷ்ட நஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ள மனந்தளராமல், பிடிவாதங்கொண்டு கோர்ட்டு முதலான நீதித் தலங்களில் வழக்குத் தொடுத்து அபரிமிதமான பணங்களை யிழக்கின்றனர்.

சிலர் தமக்கு முக்கியமான அறிவைச்சாப்பிடும் நறவைச் சாப்பிட்டு அவலாகின்றனர்.

---

7. "கொடுத்துவைத்த வரையில் எடுத்து வைத்திருக்கும்" "இட்டார்க் கிட்டபலன்" என்றபடி 4 வகையான வுணவை 6 சுவைக் கறிவகைகளோடு புசிக்கும் பெருஞ்சம்பத்துடையவர்களாயும், "அன்ன மொருவலை யாவெனொரு பட்சி, அன்ன வலையில் அன்வந்து சிக்குவான், அன்ன மெங்குண்டு அதனு மங்குண்டு" என்றபடி அனருட்குப் பாத்திராயுமாவர்; 'இட்டார் பெரி யோர்' என்னும் புகழிற்கு முரியராவர்; உணவை விரும்பிவரும் பெரி யோர்கள் கன்னிலைமையைப் போதித்துப் பிறப்பிறப்பென்னுந் துன்பக் கடலினின்றுங் கரையேறும் வழியைக் காட்டக் கண்டுகொள்ளும் புண்ணி யர்களுமாவர்.

8. இனையான்குடிமாற னெயனர், பொன்னனையார், கபீர்தாசர், துளசி தாசர் முதலிய எண்ணிறந்த பக்த கோடிகளும், பிரபுக்களுமாவார்.

9. இன்னவிடத்தில், இன்னவேளையில், இன்னர் மூலமாக இவ்வளவு கிடைக்குமென்னும் நம்பிக்கையற்றுக் கைகால் சோர்ந்து, உள்ளடுங்கி, தேகங்குறுகி, வாய்குளறி, கல்லறிவுமாறிப் பலவிடத்தழன்று கைக்கெட் டியது வாய்க்கெட்டாமல் வருந்தி, உண்டும் உண்ணுமல் சதாகாலமுந் துக் கித்துச் சாவர்.

சிலர் பயாஸ்கோப்பு, நாடகம், சர்க்கஸ், ஜாலம், கச்சேரி முதலான வேடிக்கைகளைப் பார்க்க விரும்பி வாய்த்தவிடம்போய் அடிப்படை ஒரு ரூபாயும் போனதென்ப தொப்ப. துட்டைச்செல வழித்துத் தாயவுடம்பைக் கெடுத்துக் கொள்ளுகின்றனர்.

சிலர் மனையாள் தனித்திருந்து மனம் வருந்த, கொடிய வியாதி, தரித்திரம், அகௌரவ முதலிய பல கெடுதிகளைச் சடுதியிற்றரும் வேசிகளுக்குத் தம்பொருளைத் தாரைவார்த்து, கூத்திக்கிட்டுக் குரங்காணன், வேசிக்கிட்டி விழலனென்ன பட்டங்களைப் பெற்றுப் பாழாகின்றனர்.

சிலர் யாம் ஆசாரமுடையோமென்று சொலலி மடத்துப, காலட்சேபம் பிரசங்கம உபாதியாசங்களின் மூலமாக ஆசாரம கனப்பிறக்குப்போதித்தும், கல்வி அறிவு அதிகாரம் குலவிவாழுக்க முதலியவற்றைப் பொருட்படுத்தாமல பார்ப்பார் பத்திமா வென்றெண்ணிக் கொள்ளட்டும் என்று கருதாதார் விபூதி உருத்திராக்கம் துளசிமணி முதலியவற்றைத் தரித்தும், காணமின்றி மேலேக்காரர்களையும மனையாள முதலாயி ரிணரையும் நம்பாமல மச்ச மாம்சங்களை வாங்கிச் சுமந்து கொண்டு வந்து உடனிருந்து சமைத்துச் சாதங் கறியாகவும் கறி சாதமாகவும் விளம்புடைகையுண்டும், மடிதுர்ணையிட் புடைக்கத் தருதற்கையாழுக்க லைக்கின்றனர்.

சிலர் விதம்விதமான வருகளாயுந் தீகால்லியமடைந்து பாதக ராகின்றனர். சிலர் தந்தை மரணமாயபபர அருந்தாமை கவனி யாமல் விலையுயர்ந்த ஆடைகளை வாங்கி வருஷத்தில் வண்ணனை எட்டு மாதமும் தான் ஒரு மாதமுமாகக் கட்டி நட்டம்படுகின்றனர்.

தோட்டியது வேடிக்கை கூத்தி புலால்சூது
வேட்டிக் கழிப்பர் விருதாவாய்த்—தாட்டியுடன்
அன்னமிட் டேனுழு மாடசினையை நீக்குவரிடமன்
றுண்ணக் குருடாவா தோர்.

வண்டனை நோக்கத்தில் வைத்து வீண் செலவுகளைச் சுருக்கி, "இவ்வாறேனு மிரு நின்மின்" என்னுமு ஔவைப் பிராட்டியார் திருவாக்கினைக் கவனித்து, "சங்கில் வார்த்தால் தீர்த்தம் செம்பில் வார்த்தால் தண்ணீர்" என்றறிதோல அன்ன

தானத்தில் தம்பொருளைச் செலவழிப்பவர்க்கு அவ்வளவுக் கவ்வளவு பகவான் புண்ணியத்தையும் செல்வத்தையும் வளரச் செய்வானென்பது திண்ணமாம்.

" நினையவித்து நீராட லாகா துரைப்பார்
உரையவித் தொன்றுஞ்சொ வில்லை—யரையரீய்ச்
செய்துமா மென்னினு மாகா துளவரையால்
செய்தவர்க்கே யாகுந் திரு" என்னும் முதுமொழி பழுதாமா? இக்காலத்தில் தனவந்தரா யிருப்பவர் முற்பிறப்பில் அன்னதானஞ் செய்தவரென்பதையும், அதனைச் செய்யாதவர் ஏழைகளென்பதையும்,

" மண்ணர் சட்டி கரத்தேந்தி மாகாய் கவ்வுங் காவினாய்,
அண்ணற் றேங்கி யிரப்பானை யறிந்தே மறிந்தே மம்மம்மா,
பண்ணர் மொழியார் பாலடிசில் பசும்பொற் கிண்ணத்துப் பரிந்
தூட்ட, வுண்ணு நின்ற போதொருவர்க் குதவா மாந்த ரிவர்
தாமே" என்னும் பாசுர முணர்த்துமன்றே? இத்தகைய மகிமை வாய்ந்ததாய் எத்தானத்தினுஞ்சிறந்த வுத்தமதானமானதாயுள்ள இவ்வன்னதானத்தைச் செய்து அதனலாம் புண்ணியத்தைப் பெறுது அவலனேனே யென்று பலகால் சிந்திக்க சிந்தனை முற்ற, சற்குருநாதனருளாலவலை முன்னிட்டு இந்நூலை யான் செய்ய வந்தேனே யல்லாமல் கல்வியாளன், பொருளாளன், தயாளன் என்பவற்றைக் காட்டிக்கொள்ள முன் வந்துள்ளேனல்லேன்.

இலக்கண விலக்கியங்க ளிருந்தபடியிலும் குடியிருந்தபடியாக, அடியேன் அவாமிகுதியாலெழுதிய இந்நூலினுள்ள எழுத்துக்குற்றம், சொற்குற்றம், பொருட்குற்ற முதலியவற்றைக் கைம்மாறுகவாத காதலோடுதவுங் கருணை மூர்த்தியாய், இவ்வுலகுய்யும் வண்ணம் நகரந்தோறுந் தம்மை விரும்புகின்றவாது குலக்குற்றம், குணக்குற்றம், பொருள் வரவு, கல்விக்குறைவு முதலியவற்றை நோக்காமலும், சமயம் பாராட்டாமலும், புகழை விரும்பாமலும் சென்று சரியையாதி நான்கு பாதங்களையும் அங்கை நெல்லிக்கனியென அன்னோ

தேக விபரீதமற அவர்களுக்குப் போதித்து ஞானதாதாவென் னும் புகழுடம் புற்றவராய், எனது சற்குருநாதராய், "லோகோப காரி" "சக்ரவர்த்தினி" இப்பத்திரிகைகட் கதிபரா யாசிரியராய், இந்து தியலாஜிகல் ஸ்கூல் தமிழ்ப்பண்டிதராய், வேதாந்தசர்க்க போதகாசிரியராய் விளங்கும் மஹாவித்துவான் ஸ்ரீமத் சோ. வடிவேலு செட்டியாரவர்கள் கனிந்திதனைச் சிர்செய்துதந்தனர்; அவரது திருவடிகளை மனமொழி மெய்களால் சிந்தித்து வாழ் த்தி வணங்குகின்றனன்.

இதனைத் திருத்தமாக அச்சிட்டுக்கொடுத்த சச்சிதானந்த அச்சியந்திர சாலையாரவர்கட்குப்,

தத்தம் வித்வத்திறமையால் இந்நூலும் ஒரு நூலாகவுலகத் தலாவவேண்டி அன்போடு ஆரம்பகற்றஞ் செய்த வித்துவான் களுக்கும், யான் மனப்பூர்வகாக வந்தனஞ் செய்கின்றேன்.

தே. அ. கு.



சாத்துக்கவிகள்.

நியாயசந்திரரும், வேதாந்த பாஸ்கரரும்,
ஸ்ரீ ஆன்மபுராண ஸ்ரீ பகவத்கீதா கூடார்த்த தீபிகை முதலிய
நூல்களின் மொழிபெயர்ப்பாசிரியருமாகிய
ஸ்ரீ வீர. சுப்பைய சுவாமிகளவர்களியற்றிய

எழுசீர் விருத்தம்.

மோனமா நிலையை யடைந்துறிற் றிருத்தி முடிந்திட லனு
பவ மறிவோர்க், கானந்த மேல வெவர்க்குமே திருத்தி யாக்
கிட லன்னமா தானந், தானமா மெவற்றுந் சிறந்தென் றறைந்
தார் தவமிகு பெரியவர் மிகவே, யானந்த முலகி லியவர் புரிந்
தா தனுதனை விளக்கநாக் கிடமே.

அன்னநற் றுன வினக்கமென் றாலி யரிதினிற் பயந்தனன்
புரிந்தே, இன்னறுங் குணத்த னெனைமுகட் கிரங்கி யிசைபடிகத்
திசையெலாம் பரப்பித், தன்னிய முன சாமியாங் குப்பு சாமி
யென் றிடமிகத் தக்கோன், நன்னிலை பெருக மாமுகத் தொளிரு
காயக னற்றிரு வருளால்.

காஞ்சீபுரம் -

ஸ்ரீமத் - நிச்சல - இராமாநந்த் சுவாமிகளவர்களியற்றிய

எண்சீர் விருத்தம்.

நன்னிலைசே ரருணமலை மென்ம டுக்கனைத்தும் வீசு
காதாந்த னடியெனிக்கு நன்மணைங்கந் திக்கும்
பொன்னுலகு புகழ்மணமும் போதமணம் பரவும்
பொய்பறமெய்ப் பொருளறிந்து பொருந்துமனை காறுங்
கன்னெஞ்சக் கத்துவிதத் திருமணமு மணைக்குங்
கனியருணார் சாமிகுப்புச் சாமியெனும் பெயரான்
மன்னுமன்ட னனதான வினக்கமெனு நன்னூல்
வாய்மலர்ந்த வெண்பாவா மாலைக்க ளிடத்தே.

ஸ்ரீ சுவாமிகளவர்களின் பாதசேகரர்

ஸ்ரீமத்-சோமசுந்தரமணி சுவாமிகளவர்களியற்றிய

எண்சீர் விருத்தம்.

திருவிளங்குஞ் சிவஞான சித்தியெலாம் விளங்குஞ்
சின்மயராய்ப் விளங்குமடியார் கருணையது விளங்கும்
பொருள்விளங்கு மெய்ப்பரிவாம் போதசுகம் விளங்கும்
பொன்னுருட்டின் வாழ்வினைத்தும் பொய்யெனவே விள
தெருள்விளங்கு மருத்துவிதா ரூத்தசுகம் விளங்குஞ் [ங்கும்
சிற்சுகனைஞ் சாமிகுப்புச் சாமியெனுஞ் சீரா
ணருள்விளங்க வளித்தவன கானவிளக் கத்தா
லடைமகிமை யென்னுளிங் கறிந்துரைக்கற் பாற்றே.

சிவாகசியப் பதிப்பாசிரியர்

ஸ்ரீமத் க. சதாசிவ செட்டியார் **B. A.** அவர்கள் எழுதிய

வசனம்.

ஸ்ரீமான் சாமிகுப்புசாமி என்பவரால் செய்தளிப்பப்பட்ட "அன்னதான விளக்கம்" என்னும் புத்தகம் வரப்பெற்று உவந்தேன். இவர் அன்னதானத்தை அனுதினமும் அனுசரித்து உபகரிப்பவராய் அதனைப் பிறரும் மேற்கொள்ளுமாறு இந்நூல் வாயிலாகப் போதிக்க முன்வருதலின், இவர் செய்கை வாசகயிங்கரிய மாவதன்று. அன்னதானம் ஏற்போர்க்குப் பசிப்பிணிமாற்றி இன்பம் பயத்தலின், ஈவோர்க்கு இம்மையில் கீர்த்திப் பிரதாபங்களும், மறுமையில் புருடார்த்தங்களும் ஒருங்கே கருதலின் எல்லாத்தானத்திலும் மேலானதாம். இத்தனைய பெறுதலை விளக்க வெழுந்த விந்நூல் போற்றப்பட வேண்டியதே. இந்நூலுள் அமைந்த வெண்பா யாவும் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தலென்னும் வகையில் சொற்சுருங்கி, பொருள் தெளிந்து இலக்கண அமைதிபெற்றுப் படிக்கப்படிக்க இன்பம் பயக்குந்தன்மையவாய் இருக்கின்றன. இம்முயற்சி பலவகையிலும் விளக்கத்தக்கது. இந்நூல் என்றும் நின்று நிலைமாறுவரல் வேண்டுமென்று நினைத்திருக்கின்றனம்.

சென்னை, ஸ்ரீ கந்தசுவாமி கோயில் தருமகர்த்தரும்,

ஸ்ரீ கச்சியப்ப சுவாமி தேவஸ்தான டிரஸ்டியும்,

ஸ்ரீ உமாமகேசுவரர் தமிழ்வேதபாராயண பக்த ஜனசபை

பிரசிடெண்டும்,

ஸ்ரீ சர்மசிவாசாரியார் மடம் கமிட்டி மெம்பருமாய,

லைசியகுல சேரிசெட்டிமார் சங்க மானேஜிங் கமிட்டி

மெம்பருமாகிய

ஸ்ரீமத் - பழனை - இரத்தினசபாபதி செட்டியாரவர்கள் எழுதிய

வசனம்.

ஆதிகூப்க இவ்வளனிரீதினில் உறக்காறு, நாலொருள் சுட்டிய ஒருவன் அப்பொருள் வைப்புழி அற்றவர் அறிகிற் தீர் வுழி என்பதருமறை. ஆற்றுமாக்கள் அருப்பசிகளேயார் மேற் சேற உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை என்றவர் சேமிலார். அம்மெய்ந்நெறியே கூறும் இந்நால், சோறிட்டார் பெற்றபலன் சொல்லரிதாம் என்னும் ; அன்னதானமே பன்னிதானம் பலவற் றினும் பரமதானங்தான் என்னும் ; என்னை ? மனன் உளர்க்கும் உறப்பொடு தேதான்றி வயிறுகாப் பொருட் பசி வருத்தும் மாக் கட்கு வெயில் சுடவெம்பிய சேய்ப்கரிகானத்துக் கருளி மாமழை போன்றதன்றே இத்தானம்? சுதன்றே கலியாய அறம் ? இஃது உயிர்க்கொடை யன்றே ? மண்ணினி நூலத்து வாழ்வோர்க்கெல் லாம் உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே. அவ்வுரைவோர் திறமன்றே இவ்வறநால் கூறுவது ? உரைப்பார் உரைப்பவையும் அவையே யன்றே? வெள்ளிவெணி விமலருக்கு உள்ளன்போடு மெய்ப்படைமை நூண்டு அருளமுனித் தகமகிழ்ந்த வசவணத்தியோரை சங்குரைத்ததும், எவ்வுயிருங்காமாக எவ்வமறக்கண்டு ஆருயிர் மருந்தாம் அன்னமுனித்த உயிர்க்கொடையாளர் இளைஞனக்கின தன்றே ? ஆகலின், பசியென்னுந் தீப்பிணிமாற்றுவார் ஆற்றலைப் பன்னூலும் ஓர்ந்து பகுத்துரைத்தார் இந்நூலில் சாமிகுப்பு சாமிக்குரிசில். அவர் இயற்றிய இவ்வறநால் வழிநிற்பார் செல் லுங்கதிக்குயதாகிய சிதம்பரமென்பது சொல்லவும் வேண்டுமோ ?

புலவைத் தமிழ்ச்சங்கத்தின் காரியதரிசியும், தமிழ்மாகவு
உபபத்திராசிரியருமாகிய தமிழ்ப் பண்டிதர்
ஸ்ரீமத் வீ. துரைசாமி முதலியாரவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

தூவுலகி லன்னமிடும் புண்ணியத்தி னற்பொலிவைத்
தூவுரை யின்னிசித்துச் சொற்றனலு—மீமவடுகற்குப்
பூப்புசா மிக்குரிசில் கூறுபுனி லீயார்மகிழ்ந்து
செப்புவா ரன்னவன்றன் சீர்.

புதுவனை ஆருத்தாஸ்மம சாது மகாசங்கத்தின்
உப் காயகர் ஸ்ரீமத் ஜெகந்நாத நாயுடவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

அயலாய் வினங்குவனை யாராய்ந்து பார்த்துச்
சுயவறிவே யென்று துணியத்—தயவுடனே
அன்ன மிடுங்க ளானடையப் பேணுங்க
ளென்னுஞ் சுருதி யினைசந்து.

அச்சுருதி கூறுகின்ற வன்னதா னந்தன்னை
மெச்சி யொருவினைக்க மேமாதிரைன்—யுச்சமிலாச்
சாமிதுப்பு சாமியெனுந் தன்னிலக்க ணம்வல்லான்
காமிதனை மேற்றிலவா கன்கு.

சித்தந் தனிலுள்ள தின்னெல்லாம் போக்கியதைத்
சுத்தப் படுத்திச் சுகமாக்கச்—சித்தத்தில்
எண்ணுவா ரிந்நூலை யெம்மேல முற்நிங்ணை
பண்ணுவார் மிக்குப் பரிந்து.

புராணிகர்

ஸ்ரீமத் - தேவராயம்-பி - சம்பந்த முதலியாரவர்களியற்றிய
அறுசீர் விருத்தம்.

பாடுத மனிக்கின் மீனாப் பதும்படி பளிக்கு மேன்னை
யுரிதரா மன்ன தானை வினக்கமென் றெறுதுறல் லையப
திதிரு வாதர்ற பாதை நிலவுபா துலவுத் தந்தா
னதிபதி முணர்ந்து சாமி குப்புசா மிக்கீ னன்பால.

சம்பத்கிரி பிரமபீடம் -

ஸ்ரீ அச்சுதாநந்தசுவாமி யவர்களின் மாணவர்

கஸ்தம்பாடி - ஸ்ரீமத் - முத்துக்கிருஷ்ணதாச ரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

ஞானத்தின் மிக்கதெனச் சாற்று மெழிலன்ன
ஞானத்தின் றன்மை தனைத்தெரித்தான்—ஞானத்தின்
தக்ககலை யாவுந்தேர் சாமிகுப்புச் சாமியெனு
மிக்கவனிங் கார்க்கும் விரித்து.

ஷை சுவாமியவர்களின் மாணவர்

களர்—ஸ்ரீமத் - ஆ - கங்காதர முதலியாரவர்களியற்றிய

எழுசீர் விருத்தம்.

உலகில்வா ழுயிர்கள் பவப்பணி யொழிதற்
குற்றநற் சாதன மாகு
நலமிகு மன்ன தானநல் விளக்க
நல்கிணன் கற்பவர்க் கெளிதாய்க்
கலகமிக் குடைய பொறிபுலச் சேட்டை
கழிந்துதன் னிலையுணர்ந் தறிவா
யிலகுறு சாமி குப்புசா மிப்பே
சோற்கனற் சென்னைவாழ்க் கையதீன.

ஷை சுவாமியவர்களின் மாணவர்-வித்துவான்

வல்லகைர் - ஸ்ரீமத் - வைத்தியலிங்கம்பிள்ளையவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

ஞான விளக்கமுறு நற்குப்பு சாமியன்ன
தான விளக்கைத் தனையுதனி—யின
ருதவா ரகத்திருளை யோட்டியவாழ் வித்தா
னிதவா சகத்தா னினையம்ம.

களம்பூர் - விக்வான் -

ஸ்ரீமத் - செ - செல்லப்பமுதலியா ரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

கண்ணிநிகர் சென்னைநகர் தன்னிற் சிறப்புடைய
பொன்னிநிகர் குப்புசா மிப்புகழா—ன்னிநிகர்
சாந்தவன்பா லீண்டன்ன தானவிளக் கப்பெயர்நா
டோற்ந்தவெண்பா வாற்றந்தான் செப்பு.

திருநகிக்குன்றம் - ஸ்ரீசண்முகாகந்த நிலயத்தலவர்

ஸ்ரீமத் - சு - கு - அரிபுத்திரபிள்ளையவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

பண்ணு கலையுணர்ந்த டாவலரை லாமேற்க
வுன்னதா னத்தில மாக்கினு—ன்னலஞ்சீர்
சென்னை நகரிற் றிகழுங் குணவானன்
மன்னுகுப்பு சாமி மகான்.

காமக்கூர் - தமிழ்ப்பண்டிதர் - ஸ்ரீமத் - சுந்தரமுதலியா

ரவர்களின் மாணவரும்,

ஜேம்பேட்டை — உபாத்தியாயருமாகிய

ஸ்ரீமத் - நா - முனிசாமிமுதலியாரவர்களியற்றிய

சந்தவிருத்தம்.

பன்னி யம்பொரு டோன்ற நயம்பொதி பாரில் யாவரு முப்பரீவ
பன்ன தானவி ளக்க மென்னுமோ ரரிய நூலை யளிக்கனன்
இன்ன நீர்தரு சென்னை யில்வள மொழிலுயர்ங் குப்பு சாமியான்
தன்ன ரும்பர னோனி யான்புகழ் சொல்லு தற்கரி தாமரோ.

களம்பூர் - போர்டில்ஸ்கூல் உபாத்தியாயர்
ஸ்ரீமத் - பழனிவேற் பிள்ளையவர்களியற்றிய.

அறுசீர்விருத்தம்.

ஒளக்கரிய பெருமையெலா மவனியிலே றிந்துய்ய வன்ன
தான, விளக்கமுறத வெண்பாவான் வியனயங்கண் மிகவிளங்க
விரும்பிச் சொற்று, ஒளக்குற்ற மொருசிறிது முற்றிடா துயர்
நூல்க ளுணர்ந்தோன் சென்னை, விளக்கிய சாமிகுப்பு சாமி
யெனு மபிதான விழுமி யோனே.

காமக்கூர் - சுந்தரக்கல்விச்சங்கம்
முனியகர் - ஸ்ரீமத் - சந்திரசேகரப்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர் விருத்தம்.

தலையான தானமிது வெண்ணவுல கோரறியத் தகுநூ லாய்ந்து
நிலையான வன்னதா னத்தீவ மொளிநிரம்பி நிலவத் தந்தான்
அலையான வாரிதிசூ ழுலவனிபுகழ் சென்னையினி லழகாய் வாழுஞ்
சுலையான சாமிகுப்பு சாமியெனுஞ் செய்யதமிழ்க் கவிஞன்

[மாசித்தி.

தென்பட்டினம்
மீநாட்சி சுந்தரம் பிள்ளையவர்களியற்றிய
கோரிகை வெண்பா.

சாமிகுப்புச் சாமியெனுந் தக்கோனு நாவலவ
ணுமி தழுகிதென வாழிசூழ்—பூமியுளார்
போற்றனைதா னன்னிலைக்கம் பொற்பாக வேசெய்து
சாற்றினனே மெய்ஞ்ஞானஞ் சார்ந்து.

விக்கியாவதானம்

ஸ்ரீமத் பிரம்பை - பொன்னுவேற்பிள்ளையவர்களியற்றிய

எழுசீர்விண்ண விருத்தம்.

ஆலுமறை நான்கொருங்கு தாளுணைசெய் தானந்தம்மு
ளானமுதற் றூனமென்ன வறைவாரே
சீலவன தானந்தன்னை நாளுமினை யேயிரும்பிக்
தேடிபல வேனமுயுண்ண விடுவானே
மேலவர்க ளேபுகழ்ந்து கூறுவன தானமென்னு
மேன்மைமிகு மோர்விளக்கந் தருவோனே
தாலமதிற் றோனைவந்த சாந்தகுண மேருவென்னுஞ்
சாமிகுப்பு சாமியெங்கள் குருவோனே.

ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணே நமஃ

அன்னதான விளக்கம்.

(*)

பாயிரம்.

விநாயகர் வணக்கம்.

ஆனை முகத்தோனை யாரறிவாக் கண்டன்ன
தானை விளக்கத் தகுநூலை—யேனையரும்
பொல்லா மனமகற்றிப் போற்றற்கா விங்கனித்தேன்
வல்லான் கருணைபெற வந்து.

சோருப வணக்கம்.

வாசாமகோசரமாய் வாக்குமன மில்லாதா
யாசாபா சம்மற்ற வாரறிவை—யேசார்
சொரூபமெனக் கண்டுயான் சோதக்கரித்தே னென்றுந்
சொரூபவணக் கம்நீக வாழ்த்து.

சடாகாதர் வணக்கம்.

சிகம்பரமாம் பொற்சபையிற் செய்யதா ரிக்கி
னிகம்னிகமா வன்பர் விணைக்காட்—பதமா
நடம்புரியு நாதன்ற ணற்பதத்தைப் போற்றி
யடிமகற்றிப் போற்றுவனெஞ்சே யாய்ந்து.

பரமாசிரியர் வணக்கம்.

இந்திரபீ டத்தரசா வேத்துசக்தி தானந்த
வந்தமிலா வெண்டிசம வாசிரியன்—பந்தமிலாப்
பொன்னடியை வேண்டிப் புனிதவன தானமதைச்
சொன்னேனேர் நூலாய்ந் துணர்ந்து

ஆசிரியர் வணக்கம்.

வேதத்தி னுக்சி விசோவே குருவடிவா
வேதமற வந்தெ னிழிவிசினையைக்—காதலுடன்
போக்குணமையாக் கன்னனெனிக்க புண்ணியக்கா விக் ஸாதி

மகான்கள் வணக்கம்.

சுத்தபர ஞான துரியநிலை கண்டோர்கள்
பத்தருளை தட்டாத பத்தினிகள்—முத்த
ரடிபணிந் தேதுதிக்கு மன்பரன பீவா
ரடிபணிந்தே னுள்ளமகிழ்ந் தாய்ந்து.

நூற் பயன்.

ஆடவனு மாடவளு மன்புளமொத் தன்னபிடிற்
றேடமற வீசனரு டோய்ந்தென்றும்—வீடமர்ந்து
வாழ்ந்திருப்ப ரிந்நூல் வகுத்தபடி செய்வாரேற்
ரூழ்ந்திருக்கா ரெம்மாணை தான்.

அவையடக்கம்.

பகித்தோர்கட் கன்னமிடாப் பாவியிந் நூலைக்
கசியன் புடையேன்போற் கண்டேன்—சகிழுடியோர்க்
கன்பரெலா மாதரிப்பா ராதரியா ரென்போல்வார்
வன்மனத்தாற் ரூமிழுப்பார் வம்பு.

கற்றவர்கண் முன்னென்றுங் கல்லா வறிவில்லேன்
பற்றகன்ரூன் போலிந்நூற் பாடியது—சிற்றெறும்
பாழியா ழுங்கண் டனைடந்தேனென் றேகூறிப்
பாழி படைத்ததொக்கும் பார்த்து.

எம்பெருமான் பாட்டிற் கிசைத்தாரேற் குற்றமொன்று
செம்மையிலா வென்கவிக்குச் செப்பாரோ—வெம்பவர்க
ளன்னமிட் டுண்ணை வணைந்தரூ லாதவினை
லென்னகுற்றந் சொல்வா ரிதற்கு.

ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணே நம꞉

அன்னதான விளக்கம்.

நூல்.

நல்லசிவ ஞானியரு நன்றென்ப ரிட்டுண்ணல்
சொல்லல்ல வென்னுரையைச் சோதிப்பீர்—செல்வரே
யன்னமிடா ரில்ல மடவியிடு காடென்று
பன்னூலுங் கூறும் பகுத்து. 1

பணைப்பற் றுடையநரர் பாராரீ சன்றாள்
பணைப்பற் றகன்றாரே பார்ப்பர்—பணத்தினர்தா
மன்னமிட் டுண்ணுவரே லற்றாருங் கற்றாரும்
மன்னப் புகழ்வார் மகிழ்ந்து. 2

அறமெனப் பட்டதே யில்வாழ்க்கை யென்றா
ரறமனத்து வள்ளுவனா ராய்ந்திங்—கறமே
விரும்பென்றார் நம்மவ்வை மிக்கறத்தைச் செய்வார்
பெரும்பயனைச் சேர்வார் பெரிது. 3

மலைமலையாச் செல்வங்கள் வாய்ந்து மகிழ்வா
ரில்லையென்னா தன்ன மிரப்பார்க்—கலைவகற்றி
யிட்டுண்டு வாழ்வாரே வின்பமெல்லாம் பெறுவர்
கட்டுண்ணா ரென்றுங் கதித்து. 4

உண்ணா துடுக்கா துளபொருளா லல்லறங்கள்
பண்ணா திருத்தியென்றன் பாழ்மனமே—யெண்ணான்கு
தொல்லறஞ்செய் யாவிடினுஞ் சொல்லன்ன தானமெனு
நல்லறஞ்செய் தின்பநிலை நாடு. 5

அன்ன மரனுருவ மாமென்றே பன்னூலுஞ்
சொன்னவிவ் வுண்மையினைச் சோதியுங்க—ளன்ன
மருந்தாதார்க் கின்பநிலை யாய்ந்துணர்ந்து காண்மின்
பொருந்தாமா றன்னமிடப் போம். 6

அனடிகண் டார்தோ லபிநயித்து நிற்போ
மனடிணைபக் காணுமா றுபோம்—பனருவ
மன்ன வடிவென் றறியா திருக்கின்றே
மென்னகதி யாவேவா மிருந்து. 7

பத்தியுளார் தோல்ப் பகட்டிப பித்தவருக்
கத்திக்கா யின்னளவு டன்னமி தீடார்—பத்தியுட
னன்னமிடு வோமாயி னன்பு நல மாவமிங்குத்
தன்ன முப்பொய் யன்றுன்னை தான். 8

அன்னத்தா னன்றி யருளப் பெறலிதா
மன்னமி டாநக் கருளில்லை—பன்னத்
தகிலம் விளங்கு மறிவிலலார் தீதான்றும்
பகிரங்க மாயறிந்து பார். 9

அற்றார்க்கென் றீத லறமாலென் றாய்ந்து ணர்வாய்ப்
கற்றுமறி வில்லாத கன்னெஞ் சே—பற்றில்லாப்
பண்டுதனைப் போலப் பகட்டிற் பயனிலை
யிண்டைமுடி தீயானடையாக் கீ. 10

பணங்காக்கும் நாகப் போற் பாற்மனை தீய பொன்னைக்
கணமும் பிரியாது காத்தாற்—றுணை போல
தினமுந் தவறாது திக்கில்லார்க் கன்ன
மனமகிழ்ந் தீவதே மாண்பு. 11

மாதருனை நீகட்டி மயங்காதீ ரண்ணமிட
மாதருனை நீகட்டவர்க்கு மோகமாக—மாதருக்குத்
தன்மயமாய்ச் சாந்தமுறத் தன்மனதி சார்ந்தீயு
ணன்மையன நல்லோர்க்கு நல்கு. 12

நிடைப்பதற்கை காடியன மிட்டாலும் புண்ய
மிடைப்பத்தால் யீனரென்ன வுரன்றீரான்—மடைப்பதிவா
யன்னமிட்டிடி நீடையாத வக்குணமாநீபாய்ச் சாந்தகுண.
முன்னு மருதிக்கு முவந்து. 13

கன்னலுங் கருதக்குங் கமழுங் குவளாமுன்
மின்னலுமை யுங்கண்டு விரும்பாதகா—ரண்ணலெனில்
கன்னடார் வியப்பக் கருணையா யன்னமிட்டா
லண்டா னியமடை வாம். 14

எமன் வருமுன்னே யெனைநரகா மாகுமுன்னே
காமநோ யாதி கலக்குமுன்னே—மாமன்னையார்
போவென்று கூறவுயிர் போமுன்னே யெம்மழகின்
வாவென்ற ணைமனித்து வாழ்.

செல்வமது செல்வமெனச் செப்பாம லேசெல்லுஞ்
செல்லுமெனுஞ் சொற்பொருளைத் தேர்ந்தறிமின்—செல்வர்
ளில்லையென் பார்க்கன்ன மில்லையென் றுதளிமி [கா
ரெல்லையில்பே ரின்புண் மெக்கு.

பசிபொதுவா மன்றிப் பசியிலிரண் டில்லை
கசியுமன் பில்லாக் கருமி—பசியென்று
வந்தவர்யா ராயினுநீ மாறு தணமீவாய்
சொந்தஞ் சுவர்க்கந் துணை.

அன்னமிட் டென்பாரை யண்டவெல் லாந்துதிக்கு
மன்னமிட வஞ்சாதி ராரறிவீ—ரன்னமிட்டா
னல்லவர்க ளுண்மதிப்பர் நற்பொருளெல் லாஞ்சேருஞ்
வல்லமன் வாணதசெயான் வந்து.

பிச்சையிட் டென்பதற்குப் பின்வாங்கேல் பேய்மனமே
பிச்சையிட்டாற் றீமையெலாம் பின்வாங்கும்—பிச்சையி
ராயாய்ப் பிறந்துழன்று நல்லுயிரவுக் கேகக்குற்றுப் [டார்
பேயாய்த் திரிவார் பிறகு.

மரம்பழுத்தாற் பட்சிகளே வாவென்னு முன்னைக்
காம்பைடைத்து மீயக் கருதாய்—பரம்பரனே
யெங்ங ணடைந்திவை யேன்பெற்றாய் செல்வத்தை
யிங்ஙனே யன்னமிட வென்.

என்ன தவஞ்செய்தே னிப்பொருளைப் பெற்றேனென்
றுன்னிப் பிரிதி முயல்வெய்க—மன்னு
முயிர்போலப் பொன்னை யுவந்து காவாமற்
செயிர்தீ ரனதானஞ் செய்.

நானே யறம்புரிவ நானேதவஞ் செய்வமென
நானேவீ ணுக்காதே நன்னெஞ்சே—நானேகாள்
கங்காளீ னாவன்றி கமலாளீ னாகீயுணரா
யிங்ஙனே யிவ்வதனுக் கெண்.

அருளினமண் ணாக ளருளி லுணைப் பற்ற
மருளுவங் கொண்டு வருவா—ளருளுற்றே
யற்றவர்க ளண்ண வனபீர் தானருளாற்
பற்றகன் றுய்ந்திடுவே பார். 23

செத்த பிறகுநீ சேர்த்துவைத்த பொய்ப்பொருளை
யுத்தமமா கல்லறத்தி லுய்ப்ப போ—புத்திகெட்டுக்
கள்ளநெஞ்சுள் ளோடு கபடவிலை மாதருக்குந்
தள்ளுவபோ யாதே தமர். 24

உண்ணு துடுத்திடா தோரறமுஞ் செய்திடா
தெண்ணு தனவெண்ணி யிப்பணத்தைக்—கண்ணினுறும்
பார்த்திருந்தா லென்ன பயனும் பசித்துடலம்
வேர்த்துவந்தார்க் கீய விருப்பு. 25

மானிடரா யுற்று மாமிருகம் போலிருந்தான்
மானிடர்நா மாவமோ மண்ணுலகில்—மானிடரா
வானதனுக் கேற்ப வறமருந்தஞ் செய்ததனால்
ஞானதனுப் பெற்றிடலே நன்று. 26

இருந்தாற்போ லிவ்வுடலை மேருமந்தோ நெஞ்சே
னிருந்தினர்வந் தால்வெறுக்க வேண்டாம்—னிருந்தினரை
யாரென்று பார்த்தா யானன்றே மோகமற்றுப்
பாரொன்று நல்லறத்தைப் பற்று. 27

செழும்புனலிற் றேனை செழித்துவாழ்ந் தாலும்
வழும்பரு வாறுகீழ் மக்கள்—செழும்பொன்மே
லுற்றாலும் லோபமரு ளுமரிவ ரென்பிறந்தார்
பற்றியன மீவதுவே பண்பு. 28

இறப்பதுண்மை யென்றே யெளியோர் தமக்கு
மறப்பின்றி யிட்டுண்டு வாழ்வார்—மறப்பற்றுப்
பண்ணடைமன் றேபோற்றும் பாவடினைத் தம்முளத்திற்
கொண்டுசி ராவார் குறித்து. 29

அறம்புரிவா ரீசனடியடைவ ரண்ணம
யறமாவ தீதலே யாமித்—திறமுணர்ந்த
யண்ணமே யிந்தா னறநா யகியிதனைச்
சொந்தமெனச் செய்வாய் துணிந்து. 30

அழிசெல்வத் தாற்செருக்குற் றற்றார்க டம்மை
யிழிசொல்லா லேசாதீ யென்று—மழிபொருளாற்
கெட்டவர்கள் கோடி கெடுமதியாற் பல்பிறப்பிற்
பட்டவர்க ளெண்ணினெஞ்சே பார். 31

ஏழைகளைக் கண்டா லிரங்கி யினைசந்தமட்டுங்
கோழைமன மின்றிக் கொடுப்பாயே—வாழைக்
கெடுத்தகற்றி மீசன்றன் கிஞ்சுகப்பொற் பாதத்
தடுத்திடவே செய்வா னறி. 32

வேதஞ்சொன் மார்க்கம் விளம்புமிடத் தப்பலவாம்
வேதத்தூ வாட்டல் விளக்காகுங்—கோதகல
வேழைக்கூ லீவார்க் கிருப்பதவி தந்தபிரா*
வாழையற வேவியொழிப்பா னேர். 33

அன்னதா னத்தா லடையலா நற்சிவத்தை
யன்னதுசெய் யாதா ரடைதலிலை—சொன்னேன்
சிவமறிய முக்காலுஞ் சிற்றுணையென் றெள்ளீர்
பவமறுத்தல் சோறிடலின் பண்பு. 34

பன்னுதா னத்துட் பரமதா னந்தானீயா
ரன்னதா னம்மென் றறைந்திட்டா—ரன்னதனை
மேற்கொண்டு செய்திடுவார் மேலாம் படிமடைவ
ரேற்குமா றெல்லா மினையது. 35

அன்னமிட்டு மாறனு ராலுக்க திபெற்று
ரன்னமிடும் புண்ணியத்தை யாரறிவர்—பன்னரிய
புண்ணியத்துட் புண்ணியம் பெற்றவர்கள் புற்கையது
தண்மையுட னீந்தவர்க டாம். 36

நம்பொருணம் பூமிமனை நம்மக்க ளென்றுநம்பி
வம்புவழக் கிற்கே வழிவகுத்தி—டம்பச்
செலவிட்டுக் கெட்டாய் சிரிக்கின்ற நாயே
செலவிட் டனைதானஞ் செய். 37

தருமநூ லெல்லாந் தவறுகு கற்றுந்
தருமஞ்செய் தற்கேன் றளர்க்காய்—தருமநூல்
கற்றுய்ய கடைபரப்பிக் காலற் குடல்வளர்க்கப்
பெற்றுயீ தாலென்ன பேறு. 38

பிச்சையிடா ருண்ணுமனம் பேசுமி டத்துவிடம்
பிச்சையிட் டெண்ணன்னம் பேரமுதம்—பிச்சையிடக்
கல்லாது நூல்கள் கடைபோகக் கற்பார்க
ணல்லவரோ தீயவரோ நாடு. 39

புண்ணியத்தால் வந்த பொருளைப் புகைத்துணைத்
தெண்ணித் துயர்கொள்ளு மென்மனமே—கண்கெட்டுப்
புத்தியற்று யந்தோ புகைத்தபொருள் யார்க்குதவு
மெத்திறத்து மண்ணிடை வெண். 40

வாழ்வா வதுமாய மென்றுரைத்த நல்லோர்சொ
லாழ்வினையா லேயறியா தேகெடுவா—யாழ்க்குறியா
நாறுட லுக் கூட்டிவை னென்றன்று நல்லார்போல்
பேறுறுதற் காமோ பிறகு. 41

பணமில்லார் பிச்சையிடப் பார்ப்பாரெந் நாளும்
பணமுள்ளா ரெப்பயனும் பாரார்—பணமுள்ளா
னற்றவருக் கீந்திங் கானடியைப் பூசித்துக்
கற்றவர்க்கு மீதல் கனம். 42

வரும்பணத்தை யைம்புலத்தும் வாய்ப்பா வழங்கி
வருப்பிறவி மாற்ற வறியா—தருமம்பிறவி
பெற்றும்பா ழாதல் பெருமையோ வென்னெஞ்சே
யெற்றுக் கிருக்கின்று யிங்கு. 43

அன்ன மளிப்போர்க் ககிலமணைத் துஞ்சொந்த
மன்னமி டார்க்கெதுவு மன்னியபா—முன்னிநின்று
தன்னை யறிந்தவர்க டாழ்ந்தேதார்க்கிங் கன்னமிட்டோ
ருன்னிதனை யென்னெஞ்சே யோர்ந்து 44

பசித்தவர்கட் கன்னமிட்டார் பார்புகழ வாழ்வார்
பசித்தவர்க ணெய்போலப் பார்க்கப்—புசித்துறங்கி
யெள்ளளவே லுங்கருணை யில்லாதா ரென்பிறந்தார்
கள்ளுவரோ தம்பழியைக் காண். 45

அன்னமிடு வார்தூ ணான்வேட நன்றுகு
மன்னமிடார் மேலுக் கழகாகத்—துன்ன
வணிசிவசின் னங்க ளழியினைமீ திட்ட
பணிநிகர்க்கு நெஞ்சேநீ பார். 46

சாக்குணை சிலைசப்போற் சாதிப்பார் சேவதாக்குந்
சாக்குணைஞ் சொல்வார்கள் சாதமிடார்—சாக்குழுளார்
சுற்றிகான்று நெஞ்சுங் களர்மடையுங் கொண்டினம்
படத்தர்க் கணமிருவார் பார்த்து. 47

சுளிக்காசாத்துழுக்கிக் கும்பிலிவா ரன்பா
பளிக்குணணை வஞ்சகங்கிரா ளற்ப—ரளிக்க
மனமில்லா மக்கடா மாமமமற் றென்சேனை
தினங்கழிக லென்பயனுஞ் செப்பு. 48

நாய்க்குணவைக்குஞ் சோர்சோல நற்பட்டம் வைத்திருப்பர்
நாய்க்குஞ் சுடையா சுடையுடையார்—வாய்க்குவா
றன்னமிடா தவன்னுணுடிவ ராசர்க்கா வினுக்கின்று
மென்ன பயன்பெறுவா சீயப்பு. 49

நாய்க்குன்ன படுத்தியுடி முறிற் சுடையானசோ
வாய்வளப்பங் காட்டி வாழிகிலவாய்—சோப்குணத்தைக்
கொளண்டலுக்து சீகிலிபோருன் கூடவரு சோசொல்வாய்
கண்டறிந் தன்னமிடக் கல். 50

சோறுசோற றென்றுநினைந் சோர்வார்க்குச் சோறிடலே
சீடறுசீட றென்றுமனை சீடசலகாற்—கூறுக
றிக்கன்ன டனகான மன்டாகச் செய்தெஞ்சோ
டாக்கதினைச் சீச மகிழ்க்து. 51

அய்சீயா வயிர்க்கான மன்பாகச் செய்பாம
னையா திருக்கசீ காகின்றுய்—பொய்புடம்பு
கய்பா திருக்குசீமா கன்றிகெட்ட சீழ்மனசீம
பொய்யா பொதுழிப்பொருஞைப் சீபாற்று. 52

அன்னமிட மில்லத்தி லன்பருற வெஞ்சுகப்பா
வென்னவிட முற்றுஞ சீசுகிறமா—லன்ன
மிடாமகத்தி லென்று மிடம்பை வகிக்கும்
விடாதுலனைச் சேருஞ் வினைர்த்து. 53

அன்னமிடக் கல்லாத மாகிமனை சோதிலென்ஞைந்
சொன்ன மனைற்பாயினைக் துன்னாவின்று—மன்னமிட
வாமகத்திற் கள்ளர் வருவதிலை யீதுணர்மை
சீமகத்தைச் சேர்வார் தெளிர்து:

பசியாற்றும் பத்தரிடம் பற்றற்றான் றன்வந்
தசிபதத்தி னுண்மை யறைந்து—நிசவடிவைக்
காட்டி யருளிக் கடைப்பிறப்பை நீக்கும்
வாட்டுமோ வல்வினைகள் வந்து. 55

பற்றற்ற சேவைகடம் பாழ்ப்பசியை நீக்குகின்றார்
கற்றில்லில் வாழுங் கழிசெல்வர்—நற்றவமா
வன்னதா னஞ்செய்யா தக்தீதா கெடுகின்ற
ரின்னலடை யாதிருப்ப தெங்கு. 56

பானடியார் பாதப் பரிசத்தாற் பாவம்
வினைவி லகலுமெனும் வேதம்—பான்ற
னடியா ருருவமெடுத் தன்னமிடென் றேற்பான்
கடியா தளிமின் கசிந்து. 57

அன்னமி டாதார்க் கடுத்தடுத்துத் தீங்குவரு
மென்னமொரு ஞற்றூலு மின்பமுறு—மன்னம்
பசித்தோருக் கீயாதார் பாழாம் பணந்தான்
வசிக்கரா கங்காட்டிம் வாய்ந்து. 58

வேதமொடு நீதி விகற்பமறக் கற்றிருந்துஞ்
சாதபிடக் கல்லாச் சதிகாரப்—பாதகர்தாம்
கோதில்வாக் குள்ளாராய்க் கூறுகின்றார் சன்மார்க்க
மேதிவர்க்கு வந்துதவு மேய்ந்து. 59

தம்பொருளே யீயாமற் றூவென்றேற் றன்னியர்பா
றப்பொருளைப் போற்றருமஞ் சாஞ்செய்யும்—வம்புடையா
ரென்பெறுவா ரந்தோ விதமவர்க்குண் டாகுமோ
பொன்னெஞ்சே வண்ணமிடப் போ. 60

உடல்பொய்யா மென்றுணர்ந்தா ருற்றபொரு டன்னை
விடல்வேண்டு மென்று விளைந்து—கடல்போல
வன்னதா னஞ்செய்யு மன்பருடன் கூடிநின்று
சொன்னவறஞ் செய்வார் துணிந்து. 61

எண்ணிப் படிக்கின்ற சேவைகளே யெமாற்ற
வண்ணமா நூலெலாவகையாத்—தண்ணையிலா
ரன்னதா னஞ்செய்வா ரன்பி னெறிசெல்வர்
பன்னுமயங் காண்பார் பரிந்து. 62

அருள்வடிவ மானவரை யான்றோ ரென்ற றுண்ணு
திருண்மனத்தார் குற்ற மிகைப்பபா—ரருள்வடிவ
மாணர்க் கடைபான மன்னதா னஞ்செய்த
லாணை ரதுசெய்பபா சோர்ந்து. 63

அறத்தான் மறந்தேயு மாமெனுஞ்சொற் சீர்வாய்
திறத்தான் மறஞ்செய்யுந் தீபோ—யறத்தா று
நின்றனதா னஞ்செய்வாய் நின்பிறப்பு நன்றுகும்
பொன்றுங்கா றுன்பமடையாய் சோற்று. 64

இட்டாருக் கிட்டபல னென்னு மொழியுன்னிச்
சட்டை யகன்முனை தானஞ்செய்—யட்ட
லவதான மென்செய்யு மாக்கைவிழும் சீபோது
பவமகல நல்லறத்தைப் பற்று. 65

அரன்தூணைச் கான வலர்பலவுண் டாண
லரன்றன் விருப்புமல றன்னம்—வரமாகு
மன்னமல ரின்பெருமை யாய்ந்தனதா னந்தன்னைச்
சென்மமறத் தீயோனே செய். 66

பலமலரி னர்ச்சனையாற் பாரு தவ பாவம்
மலம்போக் கலரன்ன மாகும்—பலபலவாக்
கற்பித் தருச்சிப்பார் காய்பசிக்கிற் கன்னமிடா
வற்பர்செய் தூணையிலென் னும். 67

அன்ன மலரா லடியாரை பர்ச்சிக்கி
லென்ன விணையு மிரிக்கீதாடுந்—சொன்னனுன்
முக்காலு மாணையிதா மூதறிவோர் கொள்கையிதா
மெக்காலு மிட்டுணைசெஞ் சென். 68

அன்ன மலரை யறைய மறைமுதன்மற்
றென்ன மலரு மிதற்கொவ்வா—தன்னமலர்
கொண்டன்பர் போற்றுய் குணம்படைத்து நிற்பார்சீர்
கொண்டளத்திற் போற்றுமே கு. 69

சோற்பதமீ யாதற்தோ சோர்வற்று ரென்னிறக்தோர்
கற்பணையா மென்றுலகைக் காணமே—லற்புதமா
மிவ்வுடம்பு மூப்பாமு னேழுநெஞ்சே யன்னவுறுஞ்
செவ்வியதாச் செய்திடுதீ தே. 70

அன்னமிடார் தங்கட் கடைபாள முண்டுபல
வன்னமிலா தாடையணி பற்றுவாய்ப்ப—பன்னட்
பசிதணியா தேங்கிப் பரிதபித்துப் பாரிற்
கசிவினரு கற்குறுவார் காண்.

கனைத்தவந்த மேவழுகனைக் காயா தனைழுத்திங்
கினைத்து முகம்பார்த் தினிகாய்க்—கனைப்பகல
நீரன்ன பாயிடுனு நீயளிப்பா நீயெனஞ்சே
யீரனென்னும் பல்லுலகு மேய்க்கு.

அன்ன மயமே யனைத்துயிரு மென்றிடனை
லென்னப் பெருநமைகனை யாருணர்ப்பா—யன்னமீது
யாறுநுவம் பென்றுநுவ பாகினீனை யாதினைத்தக்
காறுமதி நீயாருணர்ப்பார் காண்.

நாடரிய நீதிகனை நன்றுரப்போ தெப்படுனர்
நீடரிய நோனபது நீசமது—நாடரிய
வன்னமிகு வற்றவர்க்கட் கன்னமீ நோனபுறுனர்
சென்னி னுலகவுரிக்கு நுழற்கு.

அன்னமிடா நீரதிகியறு ப்காடபு மானங்க
ளன்ன மிடலவற்றை யாய்ந்துபல—னன்ன
படுத்தாறும் பாநீழ பரன்மீவடக் தாங்கி
நடுத்தாறு நன்னபரிலை நாடி.

கருணைசிறி நீதனுபிலார் கற்றதுறு லென்னுறும்
கருணையுளார் கற்றுர் கண்ணுங்—கருணையுளா
ரெவ்வுலகு பாய்பின்ற வீசனைனை நன்மீலார்கள்
செவ்வையுறக் கூறுவார் நீதர்க்கு.

வெந்த வொருநீன வகையபறுத்துப் பங்கிட்டிப்
பந்தமிலார்க் கன்னைப் பகர்ந்தீயிற்—றந்தவொரு
னொன்றுடல வாயிரமா நீயாகுமென நூலறைபு
மென்றுக் துணர்ணையா மிது.

வருவாயிற் பாலமைது வந்தணுகு மென்றே
வருவாயிற் சோற்றை வறிநீயார்க்—குருசியுட
னிட்டுண்டா லப்பாலை மேருகல் லின்பமுறு
கட்டுண்ணர் தீப்பிறப்பிற் காண்.

தன்பொருளா லன்னமிடான் றக்க பொருளிருந்து
மன்னியர்பாற் பொன்னேற் றறஞ்செய்வா—னன்னயமில்
பாவிகளிற் பாவி பசித்தழுவான் பின்னுளி
லேவினைதச் செய்வா னினைசந்து. 79

பணமிருந்தாற் பாவம் பதியு மதனற்
பணமுடையார்ப் பார்க்கப் பயமாங்—குணமாப்
பணமுடையார் பத்தருக்குப் பாத்திட்டுப் போற்றில்
மணமுடையா ராவர் மகிழ்ந்து. 80

அன்னத் தினைபட்ட வாருமிலா ரேவனைதினை
யுன்னிநீ யாமென்று சோராமல்—பன்னுள்
பழகினர் போலப் பதமிட்டுக் காத்த
லழகென்ப ரம்மையப்ப ராசந்து. 81

உணவிட்ட வுத்தமர்தா முதிபமோ டிங்குப்
பணமுடையா ரென்று பகர்வா—ருணவிடுவீர் [னைத
செல்வமில்லா ரெதப்போ தஞ்சோர்ப்பதென்று புண்ணியத்
தெல்லவர்க்கு மீகைதனினை யென். 82

இட்டினமுஞ் சம்பத் திழிசெலவுக் காங்ணைக்கு
மெட்டிடமா மொப்பாய வென்ற றுணிவீ—நிட்டமுடன்
முன்னன்ன மிட்ட முறைமையால் வந்தெதன
வுன்னியன்ன சோயிலிவீ சோசந்து 83

நோயுடம்மை நம்பாதீர் நொந்தவர்க்குச் சோறிடுமின்
வாயினிக்கப் பேசின் வயிறுறு—மாயுடம்மை
நம்பியதற் செப்பீர மூச முறு மீர்ந்தென்ன
மெம்பிரான் றன்முனினை சீய. 84

அழுதழு தன்ப ரமனு னையப் பெற்றுர்
பழுதி லடியெறாம் பார்க்கின்—வழுவழுனைச்
சொல்லா லனைக்காமற் சோறிட்டா லேலைழுகளுக்
கெல்லாச்சம் பத்தழுறு மிங்கு. 85

அழிபொருனைச் சொற்கமென வாழ்ந்துமகிழ் கொள்வீ
ரிழிசீவ வாறத்தா றியம்பிர்—கழிபொருனை
யுண்ணினைந்து பார்ப்பதுபோ லுண்டியிட்டுப் பார்ப்பீரேல்
புண்ணியமே நற்பணமாய்ப் போம். 86

அன்னமிட்டாள் பொன்னழியை யாசையுட னென்றலையிற்
பன்னுள் சுமந்திடவே பட்சமுண்டு—பன்னு
நடம்பிருக்கா தாகவினை லுள்ளமட்டு மன்னு
மடிமலைத் தாழ்வே னறிந்து. 87

சோறிட்டாள் பெற்றபலன் சொல்லிதா மாராலுஞ்
சோறிட்டுக் காட்டற்கே துய்யகந்தி—மாறி
வசவண்ணை னென்றுலகில் வந்துவாழ்ந் தென்று
மசனமிட்டா ரன்புடையார்க் கார்ந்து. 88

பன்னு னிருக்குமனப் பாராதே யிவ்வுடப்பு
சின்னட்பன் னளாமோ சீரழிவாய்—முன்னுளி
லன்னமிட்டுச் செல்வ மதிகமாய்ப் பெற்றிருந்து
மன்னமிடா தேதேனு வன்று. 89

எத்தானத் தாலு மிளகாத விம்மனந்தான்
பத்தருணு மூணுற் பளிக்கினைப்போற்—சுத்தமுறு
முத்தருக்காட் பட்டிருக்கு முன்னினையுந் தீர்ந்தொழியுஞ்
சத்தியஞ்சத் தியமிதுவே தான். 90

இட்டினை மன்பர்த மில்லி னெடுநிசியிற்
கெட்டுநொந்து வந்தவர்க்குக் கேடிலனை—மிட்டே
யிருக்கனிடங் காட்டி னினிப்பிறக்கத் தாயின்
கருக்காட்டாக் காட்டுங் கதி. 91

எல்லாப் பொருடனையு மேழைகளுக் கிட்டினையா
மல்லார் கருணையொடும் வாழ்ந்தவரா—யெல்லா
னினையான் குடிமாற னின்னுன் குணங்கொண்
டினையா தமுதளிப்பா யே. 92

காவாற் பெரிய கயமில்லா வேழைமுவந்து
காவா யெனவெனென்று காற்பணிந்தா—லோவாது
யார்நீயோ வென்றதட்டி யஞ்சவணைச் சொற்கூறிச்
சீர்குலைவார் மக்களோ செப்பு. 93

படிப்பினைற் பண்டிதராய்ப் பார்புகழப் பெற்றுக்
படிப்பிற் குணமே பகர்வ—ரடிசிலிடார்
நீதிகளைச் சொன்னாலு நீசப் பணப்பேயர்
காதுகளா லேற்பாரோ காண். 94

பணப்பித்துக் கொண்டவர்க்குப் பற்பலசொற் றூலும்
பணப்பித்தா னன்றைப் பழிப்ப—ருணர்வூட்டும்
வித்தையெலா மெம்முன்னே வேகாது வாய்மோகக்
கத்தாதே போவென்பர் காண். 95

பணங்கற்கா தேழைகட்குப் பாத்திபமி னென்றூல்
பணவாசை யுள்ளார் பரிந்திங்—ருணவிட்டுக்
கண்டதென்ன போவென்று கண்டிப்பா யென்கண்டார்
கண்டதென்ன வாமேமவன் கண். 96

பணமே பரமென்று பல்காலு மேத்திக்
கணமும் பிரியாது காப்பர்—பணமனைதே
யெண்ணியெண்ணிப் பார்த்தென்று மேகா திதுவென்று
பண்ணு மறமொன்றும் பார். 97

சத்தியமாத் தன்னைத் தரிசித்த வுத்தமர்கள்
சத்தியமா வேழைகளைத் தாங்காப்பார்—சத்தியமா
வெவ்வுயிருந் தாமாக வெவ்வமறக் கண்டதுண் டேடல்
கவ்வையறச் சோறிடுவார் காண். 98

சத்தியனைத் தன்னைத் தற்காத்தல் தர்மமென்பார்
சத்தியந்தான் பாதென்று சாற்றென்றூல்—சத்தியர்மோ
லுத்திக்கு மாறு வளறி மனமகிழ்வார்
பத்தியிலாப் பாமரர்தாம் பார். 99

அன்னமிடார் சோம மழியு மரணினை
யன்னமிட்டார் சத்தியத்தை யாய்ந்தவர்க—ளன்னமிடற்
கென்ன நிகராகு மேமதுரைப்பி ரன்னமற்றூல்
சொன்னவுல குண்டாமோ சொல். 100

அன்னமிடக் கற்றவரோ கற்றவர்க ளற்றவருக்
கன்னமிடார் கற்றதனை லாம்பயனென்—பன்னுள்
படித்துப் பலர்க்குரைத்தும் பாங்கில்லை காணீர்
நடிக்காதீர் கற்றவர்போ னண்கு. 101

படிப்பென்ன செய்யும் பணக்காரப் பண்பீர்
படிப்பறுக்கா தேழைப் பகையைப்—படித்ததனைக்
கத்தனடி கண்டதுபோற் காட்டுவீர் வேடத்தைச்
சத்துடைய வன்னமிடீர் சார்ந்து. 102

பணமும் படிப்பும் பரனருளாற் பெற்றும்
பணத்தை மறைத்துப் படிப்பீர்—பணக்காரப்
பண்டிதரே நீங்கள் பதுக்கி னறஞ்செய்யச்
சண்டிகளென் செய்வார்க டாம். 103

பண்டிதப்பீபர் பெற்றதனற் பாவமறு பண்டிதரே
பண்டிதப்பீபர் யாரைப் பகட்டிதற்குப்—பண்டிதரே
கல்விசெல்வ முற்றுங் கடம்பனிக்கி டாமலாட்
கொல்லியிலென் பெற்றீர் குணம். 104

புண்ணியத்தாற் செல்வம் பொருந்தியதென் றிறைறிக்கும்
புண்ணியஞ்செய் பாமனுள் தீபாக்குவதென் — புண்ணியத்
கல்வியு நற்பொருளுங் கற்பிர மாப்பெற்று [தாற்
றில்லையென் றிருசொலுவ தென். 105

னைழக் கிரங்குவார்க் கீகையிரங்கு மென்சிவன்று
னைழக் கிரங்கார்க் கிரங்குவரோ—நீகாழை
யடைத்துயிர்காஞ் சோழ னறஞ்செய்யி னன்பாய்ப்
விடைப்பாகன் வீடளிப்பான் மேல். 106

பத்திக்கு வித்தாம் வசவர் பாங்கட்குச்
சித்த மகிழ்ந்து திருவெல்லை—பத்த
வழிசிலிட்டுக் காட்டி யகமகிழ்ந்தார் முன்னம்
மழிலிட் டுதவுசெய்வாய் வந்து. 107

அன்னமுட னூனுண் டுடுபர்வ டம்புண்டோ
ரென்ன வுளைத்தாலு மேற்காம—லென்னவனை
காய்வோன் மதித்தனுவு நல்காதே நல்லன்பர்க்
காய்வோ ரழுதளியன் பால். 108

நீணிலில் வினங்குமொரு னித்தியமென் றெண்ணினால்
கனவொக்கு முட்கண்ணுற் கண்டாங—னீணிலவு
கனவென்று நீகண்டாற் காண்பனவுகள் யாவு
மனமயக் கென்றுனிப்பாய் பற்று. 109

மனத்தால் வினைகின்ற மாறுப் பிறவி
மனத்தை யறிந்தவர்பான் மன்னு—மனத்தை
யறிந்தார் மயக்கிற்கு ளாறாம லென்னம்
வறியார்க் கிடுவார் மகிழ்ந்து. 100

மோகாதி யல்லலிலே மூழ்கிக் கிடந்ததையோ
தேகாதி யுண்மையெனத் தேர்ந்தேதாகாம்—போகாதி
தண்டஞ் சுகமென்று தேதான் றுமட்டு மேமழுகளா
மன்பதைகட் கூட்டோ மகிழ்ந்து. 111

அன்பின் பெருக்கதனு லாதிசிவன் வைகுமிட [கேட்
முன்னியறி யாதுவெள்ளி யோங்குலென்பா—ரன்னைக்
டன்புடையாய் வேறுக வையமுறு கையனிட
மன்னமலை யென்றே யறி. 112

முன்னுளி லீசன் முளரிக்தாள் போற்றியதா
லின்னுளி லீசனிடம் யாதென்றே—யன்னமிடு
மன்பர்பாற் கேட்க வான்று னிருக்குமிட
மன்னமலை யென்றுரைக்க வாய்ந்து. 113

வெள்ளி மலைமேல் விளங்குஞ் சிவமென்பார்
தள்ளுமன தென்போற் றுறக்காதார்—வள்ளலை
ணன்னமலை மீதி யமர்ந்திருப்பா னுதவினை
லன்னமலை வார்க்கே யளி. 114

வட்டிக்கு வட்டியென வாங்கி முதலுக்கி
மட்டிப்பாய்ச் சேர்ப்பாய் நயந்தன்னை—மிட்டின்னை
தேதாங்கக் குவித்தலைக்கு முன்னியப் பாழ்ம்பணைத்தா
னேங்கியழ வைக்குமுண்மை யெண். 115

வட்டி யதிகமாய் வாங்காதீர் வாங்குவிரேல்
கட்டி யதிகமாய் நண்ணிடுவீர்—வட்டியற்பம்
பெற்றிடினு பன்னம் பிறர்க்கிட் டுவப்பீரேல்
பெற்றிடுவீர் நன்முக்திப் பேறு. 116

வணையிடம் வட்டி பிரக்கடன்றி வாங்கிடுவார்
கோனைழ சனிசிக்கக் கொல்கொலெனப்—பீனைழசெயு
மீனோகாய் கொண்டெடுப்பார்க் கேக்கற்று வாடியே
யூனையிட்டே வீவா ருருண்டு. 117

பணத்தி லழுந்திப் பரிதபிக்கு நெஞ்சே
பணத்தைவிட்டுச் செத்தாற் பகைத்துப்—பணத்தைப்
பிணமீது கொட்டுவதோ பேதைமைவிட் டேழைமுக்
குணமீந் துறுதியுற வோர். 118

நனவில் கனவி னயங்கு பணக்கைத்
தினமுஞ்சிந் திக்குக் திலைக்கின்—மனமேமீ
யந்தமிலான் பொன்னடிக்கிங் காளாகி வாதைசெயும்
பந்தமறுத் துய்வதெப்போ பார். 119

சாகுந் தருணத்திற் சாற்றென்றல் வாசகத்தை
யேகுமோ காதி லிருளகலச்—சாகுமுட
லுற்றிருக்கும் போதனமீந் தேகாதி நிரு வாசகத்தைச்
சிற்றம் பலவனருள் தீசர். 120

முன்பு கதிசி முனிமுன்பின் பாராம
லென்பனிக் தப்பிதருமை யேற்றனன்மெய்—பன்பர்
பிடியன்ன மிட்டுப் பெருமையெற்ற நீதிற்
படியிலுயர் வானதெது பார். 121

பருத்த தலைபணைக்குப் பற்சிடலே போல
வொருத்தருய்ச் செல்வரென வுன்னி—பருத்த
வொதிமமப்போ லாணவமு மூறியிடு போர்க் கூட்ட
விதிகிழியா முன்னம் விருப்பு. 122

கற்றிருந்துஞ் செல்வங் காத்திருந்து மின்பலைப்
பற்றிருந்து மேனைழகளைப் பாராதார்—பற்றின்
மனிதரென வந்து மடப்பானை போல்வார்
கனிவொடனை மீயக் கனிந்து. 123

செல்வமிரண் டுப்படைத்துந் தீனர்பா லன்பென்ப
தில்லயத னலன்ன மீயாபற்—செல்வ
மிடிக்கினைத் தேகமாப்புற் றேகலினு மென்று
மிடிக்கினையுந் தார்க்கிடலே மேல். 124

வேட்டியுந் தாழ்வாடையும் வெண்ணீறும் வெண்பல்லுங்
காட்டி யபிநயித்துக் கன்மனத்தா—லேட்டிலுள்ள
வித்தகமெலாங் காட்டி வெறாவாயாற் பங்கமிட்
டெத்தா தனமிடலே யெய்ம். 125

அடியர்தா னென்பா தறிவுணவு மில்லார்
மிடியருக் கன்னமிட மேவார்—குடியரைப்போற்
கொள்ளாகொள்ளா யாய்ப்பேசிக் குப்பிட்டுங் கேத்திடுவா
ரெள்ளளவே னும்பயனங் கேது. 126

உள்ளத் தொளிர்சிவத்தை யோயாம லுரூஉவாய்
வள்ளறனைத் தேடி வருந்துவா—ருள்ளம்போ
லள்ளக் குறையாத வான்றியுற்று மன்னமிடா
ருள்ளவொரு வாற்பயனை யேறு. 127

காலைமுதன் மாலைவரை காற்கடுக்க வேயலைவார்
பாலை நிலம்புகுந்த பட்சிணைப்போற்—சோலைப்
பிடிக்களவுந் துக்கமுற்றுப் போரானை யுற்றூர்ப்
பிடிச்சோ றிடுவதென்று பேசு. 128

சங்கையறக் கற்றுலுந் சார்ந்துணைம் பெற்றுலும்
பங்கமற விட்டிண்ணப் பாடரசே—துங்கமலை
நல்க வுனைத்திருக்கு நாயந் தனையுணர்ந்து
செல்காமு ணன்னடிழிற் சீர். 129

வீட்டிற் கழுகு விருந்தினருக் கிட்டிண்ணல்
பாட்டிற் கழுகினிய பண்ணைகு—நாட்டமுறு
நானந் தனக்கழகு நற்சாந்தி யன்னடிட
ருனந் தனக்கழகு தான். 130

விளைத்தமுளை நெல்லெடுத்து வீழரிசி யாக்கி
யளையிரவில் வந்தவரற் காக—விளைவா
வினையான் குடிமாற நின்பொடமு தீந்தா
ரினையா தினைத்தவர்கட் கீ. 131

இனையா தெவர்க்குமன மிட்டே யினைத்த
வினையான் குடிமாற நில்லிற்—கனையான
பாதி யிரவிற் பரற்கமுதீந் துய்த்தனைமீ நாக்
கேதிலருக் கன்னமிட வெண். 132

நேசமென வந்தோர் நெடுங்காலங் காத்திருக்கப்
பாசமுளார் போலப் பகட்பியே—நேசநீர்
வந்துநெடு நாழி வறிதிருந்தீ நில்லென்னு
மந்தகனே யன்னமிட வாய். 133

காணவந்த நட்பினரைக் காக்கனவுத் தன்னடிடா
காணமுறப் பேசி யழுகாகக்—கோணமனம்
போய்வருவீ ரென்றுனைத்துப் பொற்படாக வுண்டெலுக்கும்
பேய்மகனே யன்னமிடப் பேன். 134

சிங்கமெனப் பல்லிடத்துஞ் செப்புகின்ற செல்வர்
சிங்கமோர் காலுவந்தாற் சிந்தித்—தங்கமா
நல்வார்த்தை கூறியே நட்பினரைச் சென்றினன்பார்
கல்லொத்த நெஞ்சத்தாற் காண். 135

இல்லத் திருந்து மியற்றுமே லில்லறத்தை
யில்லமஃ தாகா திடுகாடாஞ்—செல்வமே
யென்சொல்வீ ரீதுக் கெடுத்துரைமின் ஞாயமுண்டேடல்
வன்சொலுடன் வம்பகற்றி வந்து. 136

ஆரு மனிருத்தி யன்னமிடு லெனமுகனைக்
கூருமுற வாகுமிவ் வுண்மைதனைச்—சீருற்ற
வாரணங்க ளாகுமங்க ளத்தனருள் கிளையுமே
தூணமாச் சொல்லும் புகழ்ந்து. 137

கல்விசெல்வப் பாசத்தாற் கட்டுண்டு கண்ணின்றிப்
பல்லளற்றி லுற்றங்கா பாழாவான்—பொல்லா
வரவக் கொடுமன்ன ணகலிண லென்ன
மிரவலருக் கீந்துய்ய வென். 138

ஆடம்பொருளீ வெண்டி யலிகின்ற யங்கா
கொடும்பிறப்பை யெவ்வா றுகொல்வாய்—நடுநிலையைப்
பெற்றுய்ய வெண்டினெஞ்சே பேணுதகுநற் கண்ணமிடக்
கற்றிலவாய் நாளுங் கசிந்து. 139

வேசி மனமும் வெறுக்கைபோன் றண்மனமுங்
காசி தனமே கருதுதல்போ—லாசி
லருளுடையார் நாளு மனமெனிபோர்க் கீயக்
கருதிலவா ரென்றே கழறு. 140

வேண்டியபோ தெல்லாம் விதம்விதமா வுண்டாலும்
வேண்டியுண்பால் வந்தவர்க்கு வெட்டிச்சோ—றுண்டனைகையே
யிட்டாலும் புண்ணியமே யெய்துநீ மாறுமற்
றிட்டவழி யீதேயுங் தேர். 141

அண்ணைவீட் டுச்சடங்கி லானமட்டுங் கைகீட்டிக்
கொண்டவற்கு மற்றுயுண் கும்பலுக்குங்—கண்டச்சோ
றிட்டிட்டுப் பேரொடுக்கு மெந்நிலையுன் சோறுபிடி
யிட்டிடலே யேற்பார்க் கிதம். 142

இலக்கணவி லக்கியங்க ளென்னுஞ்சாற் றின்முன்
மலக்குடல்யா னென்ன மகிழ்வாய்—இலக்கணத்தைக்
கற்றூர்க் கழுகு கனவனதா னஞ்செய்த
லற்றூர்க் குணவீ யறிந்து. 143

பெண்டுபின்னை கட்குப் பெரும்பொருளை யீட்டினைத்திங்
கண்டிவந்து வேலைழகளுக்கன்னமிடாய்—பெண்டுபின்னை
சந்ததியினிற் கூட்டமெனச் சார்ந்துவரு மேனழகட்குப்
பந்தமற வன்னமிடப் பார். 144

குடும்பம்பொய்க் கூட்டமெனக் கொள்ளறிந்து சென்று
மிடும்பை தரும்பிறவி யெய்தார்—குடும்பத்தை
மெய்யென்று நம்பி மெலிந்தோர்க் கனமனியார்
நொய்ய பிறப்பறுவார் நொந்து. 145

பயாஸ்கோப்புச் சாலம்போற் பார்த்துலக வாழ்வைத்
தயாவொடனம் யார்க்குந் தருவாய்—பயாஸ்கோப்புச்
சாலமது மெய்யாணற் சத்தியமா மிவ்வாழ்வு
கோலமறு நெஞ்சினனே கூறு. 146

தேன்மிணுக் கின்பத்தாற் சேர்ந்தீக ளன்னமிட
தேன்மிணுக் கோகினைஞ்சீற் சோதிப்பீர்—தேன்மிணுக்காற்
கெட்டவர்கள் கோடியுண்டு கேடிலறஞ் செய்யாமற்
பட்டவர்கள் கோடி பதைத்து. 147

ஆலமன நீலிகளுக் காட்பட்டிங் கன்னமிடாத்
தூல மதிகொண்டு துன்புறுவாய்—காலனுக்கே
யாட்பட்டு நிற்பதற்கோ வையோ பொருளீட்டல்
நாட்பட்டி ருப்பதற்கோ நாட்டு. 148

சாமியாஞ் சற்குரவன் றந்தவொரு கண்ணுளாற்
காமியமற் றன்னமிடக் கற்பித்தே—னேமிமனத்
தின்வயமா காதெளிவோர்க் கின்சொலுட னன்னமிட்டார்
வன்னமனர் பற்றறுப்பார் வாழ்ந்து. 149

பண்டிதரும் பாமரரும் பார்த்துய்வா ரிந்நூலைச்
சண்டியா யுள்ளார் சழக்குரைப்பார்—பண்டிதரே
பற்றற்றார்க் கீந்து படித்துரைத்தல் லோர்க்குமா
றற்ற ளைடமி னயந்து. 150

வாழி.

அன்னமிடு வாருநீ றக்கணிக் கைதந்தெழுத்து
ஞன்னிச் செபிக்கு முயர்ந்தாருடம்—பொன்னையய
வென்பாம வாரியணு மாரியணு மிந்நாலு
பண்ணுளும் வாழ்கவிப் பார்.

அன்னதான விளக்கம்

சம்பூரணம்

சுபம்.

"லோகோபகாரி" ஆபீஸ், கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

புத்தக விளம்பரம்.

போதவிளக்கம்	ரூ 0	2	திருவள்ளுவர் தோத்திரவிளக்கம்	0	1
சொரூபாநந்த விளக்கம்	0	1	கற்புவிளக்கம்	0	3
அநுபவாநந்த விளக்கம்	0	1	அன்னதான விளக்கம்	0	3
சாமிவிளக்கம்	0	1	மனத்திற்குறுத்து மதிவிளக்கம்	0	4
சர்வதரிசன சங்கிரகம்	2	8	சித்தாந்த பிந்து (ராப்பர்)	0	8
சிவமஹிம்ந ஸ்தோத்திரம்	0	1	வேதாந்த பரிபாஷை	0	10
ரிபுகீதைத்திரட்டு-குறிப்புரை	1	0	விவேகசிந்தாமணி உரை	0	12
பஞ்சதசப் பிரகாணம்-மூலம்	0	10	விவேக சூடாமணி	0	8
விவேகாநந்தர் கடிதங்கள்	0	4	தேவார திருவாசகத் திரட்டு	0	8
கந்தாலங்காரம் உரை	0	5	குமாரதேவர் 16 சாஸ்திரம்	0	10
கந்தரந்தாதி உரை	0	5	அறப்பளீசுரர் சதகம் உரை	0	1
ஞானசாதக சகாயம்	0	12	கேசிங்தாஜன்—வசனம்	0	8
பிரபுலிங்கலீலை வசனம்	0	12	மெல்மனிச பாடங்கள்	2	0
அரிச்சந்திரபுராண வசனம்	1	8	மகாராஜா நிறவு வசனம்	0	3
தாயுமானவர்பாடல்உரையுடன்	4	0	ஞானவாசிட்ட வசனம்	1	8
பிரபோதசந்திரோதய வசனம்	1	0	வியாசசாத்பர்ய நிர்ணயம்	0	8
வேதப்பொருள் விளக்கம்	0	12	கைவல்யமூலம் பாகெட்அளவு	0	3
வேதாந்த மஹாசிந்தாமணி	4	0	சிவ பஞ்சாக்ஷர பாஷ்யம்	0	4
மனோவசிய தத்துவம்	2	0	அருணாசல புராணவசனம்	1	0
ஐரோப்பா யுத்தம் 100 படம்	1	8	வேதாந்த சூளாமணி மூலம்	0	2½
சதகத்திரட்டு முதல்பாகம்	0	9	ஔவைக்குறள்-உரையுடன்	0	8
மேற்படி 2-ம் பாகம்	1	0	ரெடி மூலம்	0	2
பெர்சனல்மாக்னெடிசம்	2	0	அகம்புற ஆராய்ச்சி விளக்கம்	1	4
குமாரதேவர் 16 சாஸ்திரம்	0	10	ஆத்மபுராணம் (வசனம்)	8	0
பிரபுலிங்கலீலை உரையுடன்	2	8	திருப்போரூர் சந்நிதி முறை	1	0
ஆத்திசூடிபுராணம் உரையுடன்	2	0	சஷ்டிகவசம் உரையுடன்	0	5
கந்தரநுபூதி உரையுடன்	0	6	பர்த்ருஹரி வைராக்ய சதகம்	0	3
கல்லாடம் - மூலமும்-உரையும்	3	0	கிறிஸ்துமதகண்டனத்திரட்டு	1	8
ஆத்மபோதமும்-தத்துவபோதமும்	0	5	வசிகரவிர்த்திபோதினி	0	8
பஞ்சதசப் பிரகரணம் - மூல-விடை	1	0	கட்டளைப் பிரபந்தம்	0	8
அறிவாநந்த சித்தியார் - சுத்தபாடம்	0	4	பக்தமாலா வசனம்	3	8
பெரியபுராண திருவிளையாடல் புராண வசனச் சுருக்கம்-பாக்கெட் அளவு	1	4	இத்தனைபெரில்	1	12

பதினெண்சித்தர் ஞானக்கோவை-3-பாகம்	1 8	சுவாசமே உயிர்	1		
சங்கரத் தேவேந்தியாரின் வரப்பூட்டு	0 6	சித்தர் களஞ்சியம்	1		
ஆத்திசூடி பாஷியார்த்தமும் ஆந்தரார்த்தமும்	0 8	மானிட - வசியம்	2		
பாட்டியற் கொத்து-உரையுடன்	0 6	விவேகாநந்தர் இராஜயோகம்	}	0	
தருக்காமிர்தமும் பிரஸ்தான பேதமும்	0 8				
தோடகமென்னும் - வேதசார சமுத்தாணம்	0 4	தத்துவதர்சனி		0	1
வேதாந்தசாஸ்திர ரதநாவலி (பாக்கெட் அளவு)	1 0	ஞானதர்சனி		0	
தர்க்கபரிபாஷை (விரிவான குறிப்புரையுடன்)	1 0	பக்தியோகம்		0	
விசாரசாகரம்	3 4	தூறவி லொங்கம்	1 0	வேதாந்தடிண்டிமம்	0
நியாயப்பிரகாசம்	4 0	ஆனந்தாமாயணம்	5 0	இன்பரசக்கோவை	1
திருவாசகம்-உரை	2 8	விவேகானந்தவிஜயம்	1-4	பகவத்கீதைஉரை	2
பகவத்கீதை-வசனம்	1 4	முக்திசோபாணம்	0 8	தத்துவாநுசந்தானம்	2
வள்ளலார்சாஸ்திரம்	1 8	விசோதாசமஞ்சரி	1 2	கைவல்யம்-வசனம்	0
மதவிருக்ஷம்	1 12	பாகவதத்திரட்டு	0 6	கைவல்கார்பியசித்தி	0
பழமொழிஅகராதி	2 0	சூக்ஷசங்கிதைவசனம்	1 0	திவ்வதேசயாத்திரை	2
புனிதவதி	0 2	வேதாந்த சங்ரா	0 2	பிரஹ்மானந்தலஹரி	0
சூட்சுமசைத்தொழில் சாஸ்திரம் 174 விதைகள் (2 - ம் பதிப்பு)				0	1
வாக்கிய சுதையென்னும் திருக்குத் திருசிய விவேகம்				0	
சிவப்பிரகாசப் - பெருந்திரட்டு - குறுந்திரட்டுடன்				3	
வேதாந்தசாரம் - சமஸ்கிருத மொழிபெயர்ப்பு - வசனம்				0	1
நாளோலிவவாதக் கட்டளை (விரிவான குறிப்புரையுடன்) 3-ம் பதிப்பு				0	
ஸ்ரீபஞ்சதசி (சமஸ்கிருதமூலமும் தமிழ் உரையும்) 2 வால்யம்				10	
வேதாந்த சூளாமணி (மூலமும் விரிவுரையும்)				1	
ஸ்ரீபத்த லீலாம்ருத வசனம் 82 பகதர்களின் சரித்திரம்				3	
திருவெங்கைக்கோவை மூலமும் - உரையும்				2	
திருவாசகம் இது பிழையறப்பரிசோதித்தது உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது-பாக்கெட் அளவு காலிக்கோ				0	1
திருக்குறன் - பரிமேலழகருரை-தெளிபொருள் விளக்கம், கருத்துரை, குறிப்புரை இங்கிலீஷ் மொழிபெயர்ப்புடன்-திருத்தமான இரண்டாம் பதிப்பு				7	
ஸ்ரீவிருத்திப் பிரபாகரம்(விசாரசாகரம் நூலாசிரியராகிய ஸ்ரீசாது நிச்சலதாசரவர்கள் ஹிந்திபாஷையி லியற்றியருளிய அரிய வேதாந்தநூலின் தமிழ் மொழிபெயர்ப்பு				4	
சச்சிதானந்தசிவம் குரு சிஷ்ய சம்வாதம்-திருத்தமான 2-ம்பதிப்பு				0	1

இந்த ஆபீசில் எல்லாவிதமான சாஸ்திரங்களும் நாவல்களும் கிடைக்கும்.